2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

177—

சிறுபான்மையினர் மாணவர் விடுதிகள்

***22430—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் சிறுபான்மையினர் நலத் துறை கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிறுபான்மையின மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், பாதுகாவலராகவும் விளங்கும் எங்கள் மனிதநேயமிக்க மாணிக்கத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் சிறுபான்மையின மக்கள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் சிறந்த அங்கீகாரத்துடனும் வாழ்கின்றார்கள். இந்தியாவிலேயே சிறுபான்மையின மக்கள் மகிழ்ச்சியாக வாழும் ஒரே மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிபுரியும் தமிழகம்தான்.

சிறுபான்மையின மக்களின் தேவைகளை அறிந்து, அதற்கேற்றவாறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறார்கள். சிறுபான்மையின மக்கள் எண்ணிக்கையில் வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், அவர்கள் நல்ல கல்வியறிவு பெறுவதிலும், அவர்களுடைய வாழ்வாதாரம் முன்னேறும் வகையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களுக்கு மிகப் பெரிய உயர்வை அளித்துள்ளார்கள். சிறுபான்மையின மக்களின் உணர்வை மதிக்காமல், அவர்களை இழிவுபடுத்துகின்ற வகையில் வந்த இரண்டு திரைப்படங்களில் இடம்பெற்ற வன்முறைக்

காட்சிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்து, சிறுபான்மையின மக்களின் கண்ணியத்தைப் பாதுகாத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தான் சிறுபான்மையின மக்களின் சிறந்த பாதுகாவலர் என்பதை நிரூபணம் செய்தவர், கண்ணியமிக்க நம்முடைய பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை உலகமே அறியும்.

சிறுபான்மை மக்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென்று அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு அங்கன்வாடியிலிருந்து பள்ளி மற்றும் கல்லூரி வரையில் அவர்களுக்கு ஏராளமான சலுகைகளை அளித்தவர்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். விலையில்லா புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பை, கலர் பென்சில் மற்றும் ஜாமென்ட்ரி பாக்ஸ் போன்ற அனைத்து உபகரணங்களுடன், விலையில்லா மிதி வண்டிகள், விலையில்லா மடிக்கணினிகள், கல்வி உதவித் தொகை, உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகைகள் என கொடுத்து வருகின்றார்கள். அதிலும், முஸ்லிம் சமுதாயப் பெண்கள் கல்வி பயில வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள், 10 ஆம் வகுப்பு படித்த சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த மணமகளுக்கு ரூ.25,000/– ரொக்கமும், 4 கிராம் தங்கமும் அளிக்கின்றார்கள். பட்டம் படித்த சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த மணமகளுக்கு ரூ.50,000/– ரொக்கமும், 4 கிராம் தங்கமும் அளித்திருக்கின்றார்கள். எந்த ஆட்சியிலும் யாரும் எதிர்பாராத ஒரு மிகப் பெரிய உதவியை மாண்புமிகு அம்மா அவர்கள் சிறுபான்மையின சமுதாயத்திற்குச் செய்து சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக, முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு சில மாதங்களிலேயே சிறுபான்மையின சமுதாயத்திற்கு 6 விடுதிகளை அளித்து மிகப் பெரிய சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒரு விடுதியை சென்னை, இராயப்பேட்டையில் கல்லூரி மாணவிகள் 100 பேர் தங்கிப் படிக்கும் வகையில் துவக்குவதற்காக ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆண்டு முதல் இந்த விடுதி செயல்படத் தொடங்கும். சென்னையில் சிறுபான்மையின கல்லூரி மாணவர் விடுதிகள் தொடங்குவது குறித்த கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீனையில் இல்லை. இருப்பினும், சென்னையிலுள்ள 8 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் அவர்கள் தங்கி கல்வி

2013 ஏப்ரல் 8]

பயில சிறுபான்மையின மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் உயர் கல்வி படிப்பது மிகக் குறைவாக இருந்துவரக்கூடிய சூழலிலே, உயர் கல்வி படிப்பதற்காக சிறுபான்மையின முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியிலே அதிக ஆர்வம் ஏற்பட்டு, அவர்கள் சென்னையிலுள்ள கல்லூரிகளிலே சேரும்பொழுது அவர்கள் தங்கும் வசதிக்காக மிகப் பெரிய சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்ததன் விளைவாகத்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில், இராயப்பேட்டையிலே 100 சிறுபான்மையின மாணவிகள் தங்கிப் படிப்பதற்காக, சிறுபான்மையின கல்லூரி மாணவியர் விடுதி அமைத்துத் தரப்படுமென்று அறிவித்தமைக்காக மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, சென்னையிலுள்ள கல்லூரிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய சிறுபான்மையின முஸ்லிம் மாணவர்களும் சிரமப்படுகிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: எனவே, சென்னையிலே சிறுபான்மை கல்லூரி மாணவர்களுக்கும் ஒரு விடுதி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு, இன்றைக்கு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மாணவிகள் பள்ளி, கல்லூரிகளிலே படித்து முன்னேறுகின்றார்கள் என்றால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அளிக்கின்ற சிறப்பான திட்டங்கள்தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளியில் அவர்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் விலையில்லாமல் தருகிறார்கள்; உதவித் தொகையை அதிகமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்; ஊக்கத் தொகையை இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உயர்த்திக் கொடுக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நிறுவனமே, சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த மாணவிகளுக்கென ஒரு கல்லூரியை நடத்துகின்றது. ஆனால், அவர்கள் விடுதியை நடத்தவில்லை. அதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களுடைய சிரமத்தைப் போக்குகின்ற வகையில், இன்றைக்குச் சென்னையிலேயே மாணவிகளுக்காக ஒரு சிறுபான்மையினர் நல விடுதியை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மாணவர்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளில் இருக்கின்ற கல்லூரிகளில், விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஆனால், மாணவிகளுக்கு மாத்திரம் அதுபோன்று சரியாக வாய்ப்பு இல்லை. ஆகவே, முதலில் அவர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த விடுதியை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மேலும், சென்னையில் உள்ள 8 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் இன்னும் அவர்கள் சேருகின்ற அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு இல்லையென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கும், அரசின் அறிவிப்புக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.